டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 232 - Madurai | Online Edition

# ஊரடங்கு குறித்த வதந்திகளை நம்ப வேண்டாம்

## மத்திய அரசு தகவல்

புது தில்லி, மார்ச் 28

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் சூழல் குறித்து ஊடகங்களுக்குத் தொடர்ந்து தகவல் அளிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மத்திய அரசு நேற்று தேசிய ஊடக மையத்தில் தனது வழக்கமான செய்தியாளர் சந்திப்பை நடத்தியது. இதில், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை, வெளியுறவு மற்றும் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று நிலைத்தன்மையை உறுதி செய்ய எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர்.

### கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள்

அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களும் போதுமான கச்சா எண்ணெய் இருப்புடன் உயர் திறனில் இயங்கி வருவதுடன், போதுமான பெட்ரோல், டீசல் இருப்பும் பராமரிக்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு நுகர்வை ஆதரிக்கும் வகையில், சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து உள்நாட்டு எல்பிஜி உற்பத்தி 40% அதிகரிக்கப்பட்டுள்ளது.

### சில்லறை விற்பனை நிலையங்கள்

நாடு முழுவதும் அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களும் வழக்கம் போல் இயங்கி வருகின்றன. கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, நுகர்வோரைப்

பாதுகாக்கும் பொருட்டு, இந்திய அரசு பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை லிட்டருக்கு ரூ.10 குறைத்துள்ளது. போதுமான உள்நாட்டு இருப்பை உறுதி செய்வதற்காக, டீசல் ஏற்றுமதிக்கு லிட்டருக்கு ரூ.21.5 மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதிக்கு லிட்டருக்கு ரூ.29.5 வரியையும் அரசு விதித்துள்ளது. ஏற்றுமதி செய்யப்படும் பெட்ரோலில் 50%மும், டீசலில் 30%மும் உள்நாட்டு சந்தைக்கு வழங்கப்பட வேண்டும் என்று உள்நாட்டு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

### இயற்கை எரிவாயு

வீட்டு உபயோகத்திற்கான குழாய் மூலம் வழங்கப்படும் பிஎன்ஜி மற்றும் சிஎன்ஜி எரிவாயுவிற்கு 100% முன்னுரிமை விநியோகம் தொடர்கிறது.

அதே நேரத்தில் தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள தொழில் துறை மற்றும் வணிக நுகர்வோருக்கான விநியோகம் சராசரி நுகர்வில் சுமார் 80% ஆக உள்ளது. உணவகங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் போன்ற வணிக நிறுவனங்களுக்கு பிஎன்ஜி இணைப்புகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு நகர எரிவாயு விநியோக நிறுவனங்களுக்கு (சிஜிடி) அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிஜிடி வலையமைப்புகளின் விரிவாக்கத்திற்குத் தேவையான ஒப்புதல்களை விரைவு படுத்துமாறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் மற்றும் அமைச்சகங்களை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

### எல்பிஜி

நிலவும் புவிசார் அரசியல் சூழல் காரணமாக சமையல் எரிவாயு விநியோகம் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது. எல்பிஜி விநியோக மையங்களில் எந்தவிதமான தட்டுப்பாடுகளும் பதிவாகவில்லை. வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி சிலிண்டர் விநியோகம் வழக்கம் போல் தொடர்கிறது.

### பொதுமக்களுக்கான வேண்டுகோள்

பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி கிடைப்பதை உறுதி செய்ய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. பொதுமக்கள் தேவையில்லாமல் பீதியுடன் பொருட்களை வாங்குவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மக்கள் அதிகாரப்பூர்வமான தகவல்களை மட்டுமே நம்பு மாறும், வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பிஎன்ஜி மற்றும் மின்சார அடுப்புகள் போன்ற மாற்று எரிபொருட்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத் தப்படுகிறது.

ஊரடங்கு போன்ற வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், சமூக ஊடகங்கள் மற்றும் பிற தளங்களில் பரப்பப்படும் தவறான செய்திகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பசுமைக்கு மாறிய தேயிலை தோட்டங்கள்



ஊட்டி, மார்ச் 28

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பகுதிகளில் பனிக்காலத்திற்கு பிறகு தேயிலை தோட்டங்கள் பசுமைக்கு மாறின. கோத்தகிரி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளான கீழ் கோத்தகிரி, ஒன்னட்டி, கொடநாடு, சோலூர்மட்டம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த டிசம்பர் மாதம் நிலவிய உறைபனி மற்றும் நீர்பனி காரணமாக தேயிலை தோட்டங்களில் செடிகள் கருகி பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

பகல் நேரத்தில் நிலவிய அதிக வெயிலின் தாக்கத்தாலும், இரவு நேரங்களில் நிலவிய பனியின் தாக்கத்தாலும் தேயிலைச் செடிகள் கருகி மகசூல் பாதிப்படைந்தது. தொடர்ந்து பிப்ரவரி மாதம் இறுதி வரை பனியின் தாக்கம் இருந்து வந்ததால் மகசூல் குறைந்து தேயிலை தோட்ட தொழிலாளர்கள் ஓரிரு நாட்கள் பணிக்கு செல்லக்கூடிய நிலையும் இருந்து வந்தது.

தற்போது காலநிலையில் சற்று மாற்றம் ஏற்பட்டு பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் இருந்தாலும், பனிக்காலங் களில் பாதிக்கப்பட்ட தேயிலைச் செடிகள் மீண்டும் பசுமைக்கு மாற ஆரம்பித்துள்ளது. கோடை காலத்தில் மழை பெய்தால் பசுமை மாறாமல் தேயிலைச்செடிகள் அதிக மகசூல் தரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கோடை வெயிலால் பிற்பகலில் வெளியில் செல்வதைத் தவிர்க்கவும்

## மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்

நாமக்கல், மார்ச் 28

நாமக்கல் மாவட்டத்தில் கோடை வெயில் வழக்கத்தைவிட அதிகரிக்கும். எனவே பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை பொதுமக்கள் தேவையின்றி வெளியில் செல்லக்கூடாது என மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் துர்காமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாவட்டத்தில், நடப்பாண்டு வரும் நாட்களில் கோடை வெயில் வழக்கத்தை விட அதிகரித்து அதிக வெப்பநிலை நிலவும். எனவே, பொதுமக்கள் கவனமாக இருக்க வேண்டும்.

பருத்தியால் தயாரிக்கப்பட்ட, எடை குறைவான, தளர்வான மற்றும் வெளிர் நிற ஆடைகளையே உடுத்த வேண்டும். வெளியில் செல்லும் போது தலைக்கு தொப்பி அல்லது குடை, பாதுகாப்பான குளிர் கண்ணாடி ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும். பயணங்களின் போது போதுமான குடிநீர் எடுத்துச் செல்ல வேண்டும். உடல் வெப்பத்தை தணிக்க, அவ்வப்போது தண்ணீர், மோர், எலுமிச்சை சாறு, கஞ்சி, கூழ், பழச்சாறு, இளநீர் மற்றும் ஓ.ஆர்.எஸ். கலவை ஆகியவற்றை அருந்த வேண்டும்.

குழந்தைகள், கருவுற்ற பெண்கள், முதியோர் மற்றும் உடல் நலம் குன்றியவர்களை வெப்ப தாக்கம் இல்லாத பகுதிகளில் வைத்து பராமரிக்க வேண்டும். தங்களது வசிப்பிடத்தில் பகல் நேரங்களில் திரைச்சீலைகள், கூடாரங்கள், மறைப்பான்கள் ஆகியவற்றால் மறைத்தும், இரவு நேரங்களில் ஜன்னல்களை திறந்து வைத்து காற்றோட்டத்துடன் குளிர்ச்சியாக இருக்குமாறும் அமைத்துக் கொள்ள வேண்டும். வெளிப்புறத்தில் பணியாற்று பவர்கள் ஈரமான உடைகளை பயன்படுத்த வேண்டும். குளிர்ந்த நீரில் அடிக்கடி குளிக்க வேண்டும். கடும் வெயில் நேரத்தில் (நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை) சூரிய ஒளியின் நேரடி தாக்குதல் ஏற்படாதவாறு பணிகளை மேற்கொள்ள திட்டமிட வேண்டும்.

ஆடு, மாடு போன்ற கால்நடைகளை நிழலில் வைத்து பராமரிக்க வேண்டும். அவற்றுக்கு தேவையான அளவு குடிநீரை வழங்க வேண்டும்.

வானிலை ஆராய்ச்சி மையத்தால், வெயில் தாக்கம் குறித்து முன்கூட்டியே கணித்து தினமும் அளிக்கப்படும் எச்சரிக்கை விவரத்தை தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் மூலம் அறிந்து அதற்கேற்றவாறு செயல்பட வேண்டும்.

வெயில் நேரத்தில் சமைப்பதை தவிர்க்க வேண்டும். வெயிலில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களுக்கு அருகில் குழந்தை களையும், செல்ல பிராணிகளையும் செல்ல விடக்கூடாது. அடர்வண்ணம் கொண்ட (குறிப்பாக கருமை வண்ண) ஆடைகள் மற்றும் இறுக்கமான ஆடைகளை அணியக்கூடாது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# மாம்பழம் வரத்து அதிகரிப்பால் வியாபாரிகள் மகிழ்ச்சி

சேலம், மார்ச் 28

தமிழ்நாட்டில் மாம்பழ சீசன் தொடங்க உள்ளதால் சேலத்தில் வரத்து அதிகரித்து உள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மாம்பழ விளைச்சல் கூடுதலாக இருக்கும் என வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



அல்போன்சா, இமாம் பசந்த் போன்ற உயர் ரக மாம்பழங்கள் கிலோ ரூ.250 முதல் 300க்கு விற்பனையானது. வரத்து அதிகரிக்கும் போது விலை சற்று குறைந்தால் விற்பனை மேலும் அதிகரிக்கும் என்பதால் வியாபாரிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.



# அடுப்பில்லாமலேயே ஆரோக்கியமான உணவைச் சமைக்கக் கற்றுக்கொள்ளுங்கள்!

## ஸ்கில் நெட் கம்யூனிட்டி வழங்கும் இணையவழி இலவச பயிற்சி ( Zoom Meet )

**கேஸ் தட்டுப்பாடு – மாற்று வழி**

கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடா? கவலை வேண்டாம்! அடுப்பில்லாமலேயே ஆரோக்கியமான உணவைச் சமைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்!

இந்தியாவில் தற்போது நிலவும் எல்பிஜி (LPG) கேஸ் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு போன்ற இக்கட்டான சூழ்நிலையில், சுய சார்புடன் வாழ்வதற்கும் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் அடுப்பில்லா சமையல் (Fireless Cooking) முறையைக் கற்றுக் கொள்வது மிக மிக முக்கியம்!





கேஸ் அடுப்பு, விறகடுப்பு, கரண்ட் அடுப்பு என எதுவுமே இல்லாமல், இயற்கையான முறையில் சத்தான உணவை தயாரிப்பது எப்படி? ஸ்கில் நெட் கம்யூனிட்டி வழங்கும் இந்தத் தனித்துவமான இலவசப் பயிற்சியில் இணைந்து பயன் பெறுங்கள்.

**முக்கிய அறிவிப்பு :** இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளத் தயாராக விருப்பமுள்ளவர்கள் மட்டும் எங்கள் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

**மீட்டிங் லிங்க் (Zoom Link) : https://us06web.zoom.us/j/88046358525?pwd=deLa51rEdFqKyUu5Fpa002x0UCKqNk.1**

**Meeting ID: 880 4635 8525 - Passcode: 841820**


கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மலைப்பகுதி மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் இயந்திரமயமாக்கல்

## அறிமுகம்

மலைப்பகுதி மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் வேளாண்மை ஒரு முக்கியமான தொழிலாக இருந்து வருகிறது. இப்பகுதிகளில் பெரும்பாலும் சிறு மற்றும் குறைந்த நிலப்பரப்பில் விவசாயம் நடைபெறுகிறது.

ஆனால் நில அமைப்பு, போக்குவரத்து வசதி, பொருளாதார நிலை மற்றும் தொழில்நுட்ப அறிவு குறைபாடு போன்ற காரணங்களால் வேளாண் இயந்திரங்களை முழுமை யாக பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் உற்பத்தி திறன் குறைவு, தொழிலாளர் சுமை அதிகரிப்பு மற்றும் விவசாய செலவு உயர்வு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

வேளாண் இயந்திரமயமாக்கல் என்பது வேளாண் பணிகளை எளிதாக்கி, நேரத்தை சேமித்து, உற்பத்தி அளவை அதிகரிக்கும் ஒரு முக்கியமான தொழில்நுட்ப முன்னேற்றமாகும். எனினும், மலைப்பகுதிகள் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் இந்த இயந்திரமயமாக்கல் பல சவால்களை சந்தித்து வருகிறது.

## மலைப்பகுதி மற்றும் பழங்குடியினர் பகுதிகளின் தன்மைகள்

- **சரிவான மற்றும் குன்றான நில அமைப்பு**

மலைப்பகுதிகளில் நிலம் சமமாக இல்லாமல் சரிவாகவும், குன்றாகவும் இருக்கும்.

- **சிறிய மற்றும் சிதறிய நிலப்பகுதிகள்**

விவசாய நிலங்கள் சிறிய அளவில் மற்றும் பல இடங்களில் சிதறி காணப்படும்.

- **அடிப்படை வசதிகள் குறைவு**

சாலை, மின்சாரம், நீர் போன்ற அடிப்படை வசதிகள் குறை வாக இருக்கும்.

- **பொருளாதார நிலை குறைவு**

பெரும்பாலான விவசாயிகள் குறைந்த வருமானம் கொண்டவர்கள்.

## முக்கிய சவால்கள்

### 1. நில அமைப்பு சிக்கல்கள்

மலைப் பகுதிகளில் நிலம் சரிவாகவும், உயரத்திலும் இருப்பதால் பெரிய வேளாண் இயந்திரங்களை இயக்குவது மிகவும் கடினமாகிறது. டிராக்டர், ஹார்வெஸ்டர் போன்ற பெரிய இயந்திரங்கள் இப்பகுதிகளில் பயன்படுத்த முடியாமல் போகின்றன.

### 2. சிறிய நிலப்பரப்புகள்

பழங்குடியினர் பகுதிகளில் நிலங்கள் சிறியதாகவும் சிதறிய தாகவும் இருப்பதால் இயந்திரங்களை பயன்படுத்துவது பொருளாதார ரீதியாக லாபகரமாக இருக்காது.

### 3. போக்குவரத்து மற்றும் சாலை வசதி குறைவு

மலைப்பகுதிகளில் சாலைகள் குறைவாக இருப்பதால் இயந்தி ரங்களை அந்த பகுதிகளுக்கு கொண்டு செல்ல முடியாது. மேலும் பழுதான இயந்திரங்களை சரிசெய்யும் சேவை மையங்கள் அருகில் இருக்காது.

### 4. பொருளாதார சிக்கல்கள்

வேளாண் இயந்திரங்கள் அதிக செலவு உடையவை. சிறு விவசாயிகள் அவற்றை வாங்குவதற்கு போதுமான பணம் இல்லாமல் இருப்பார்கள்.

### 5. தொழில்நுட்ப அறிவு குறைவு

இயந்திரங்களை பயன்படுத்தும் திறன் மற்றும் பராமரிப்பு பற்றிய அறிவு விவசாயிகளுக்கு குறைவாக இருக்கும். இதனால் இயந்திரங்கள் சரியாக பயன்படுத்தப்படாமல் போகின்றன.

### 6. எரிபொருள் மற்றும் மின்சாரம் பற்றாக்குறை

மலைப்பகுதிகளில் மின்சாரம் மற்றும் எரிபொருள் கிடைப்பதில் சிக்கல்கள் இருப்பதால் இயந்திரங்களை தொடர்ந்து இயக்க முடியாது.

### 7. பராமரிப்பு மற்றும் சேவை வசதி இல்லாமை

இயந்திரங்கள் பழுதாகும் போது அவற்றை சரிசெய்யும் தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் சேவை மையங்கள் அருகில் இல்லாததால் அதிக நேர இழப்பு ஏற்படுகிறது.

இந்த சவால்களின் விளைவுகள்

- வேளாண் உற்பத்தி அளவு குறைகிறது
- தொழிலாளர் வேலைச்சுமை அதிகரிக்கிறது
- விவசாய செலவு அதிகரிக்கிறது
- விவசாய வருமானம் குறைகிறது
- புதிய தொழில்நுட்பங்களை ஏற்க முடியாத நிலை உருவாகிறது.

**தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள்**

**1. சிறிய மற்றும் எளிய இயந்திரங்கள் உருவாக்குதல்**

மலைப்பகுதிகளுக்கு ஏற்ற சிறிய அளவிலான மினி டில்லர், பவர் வீடர் போன்ற இயந்திரங்களை உருவாக்க வேண்டும்.

**2. அரசு உதவித்தொகை வழங்குதல்**

விவசாயிகளுக்கு இயந்திரங்களை வாங்க அரசு மானியம் மற்றும் குறைந்த வட்டி கடன் வழங்க வேண்டும்.

**3. கூட்டு பயன்பாட்டு மையங்கள்**

ஒரே கிராமத்தில் உள்ள விவசாயிகள் இணைந்து இயந்திரங்களை வாடகைக்கு பெறும் மையங்களை அமைக்க வேண்டும்.

**4. பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள்**

விவசாயிகளுக்கு இயந்திரங்களை பயன்படுத்தும் முறைகள் மற்றும் பராமரிப்பு பற்றிய பயிற்சி வழங்க வேண்டும்.

**5. சாலை மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தல்**

மலைப்பகுதிகளில் சாலை, மின்சாரம் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

**6. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு**

சூரிய ஆற்றல் மற்றும் மின்சார இயந்திரங்களை பயன்படுத்துவது எரிபொருள் செலவை குறைக்க உதவும்.

**முடிவு**

மலைப்பகுதி மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் வேளாண் இயந்திரமயமாக்கல் பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது. ஆனால் சரியான திட்டமிடல், அரசு ஆதரவு, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் மூலம்

இந்த சவால்களை சமாளிக்க முடியும்.

இதன் மூலம் வேளாண் உற்பத்தி அதிகரித்து, விவசாயிகளின் வாழ்க்கை தரம் மேம்படும்.

“சவால்களை சமாளிப்போம் – இயந்திரமயமாக்கலை வளர்ப் போம்!”

கட்டுரை ஆசிரியர் : Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com



# பூமி வெப்ப மடைதல், குளர்ச்சியடைதல் பற்றிய தகவல் தெரியுமா?



சமீப காலமாக பூமியில் பல்வேறு வகையான வெப்ப நிலை மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை நாம் கண்கூடாக தெரிந்து கொள்ளுகிறோம். இதனால் நம்முடைய அன்றாட வாழ்க்கையும் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படு கின்றன. இதை பற்றி அறிந்து கொள்ள கீழ்க்கண்ட இரண்டு முக்கியமான விசயங்களை பற்றி விரிவாக தெரிந்து கொள்ள வேண்டும்.

**1) பூமி வெப்ப மடைதல் (GLOBAL WARMING)**

பூமி வெப்ப மடைய நாம் தான் முக்கியமான காரணமாக இருக்கிறோம் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

மனிதர்கள் செய்யும் செயல்களை இதனை ஏற்படுத்து கின்றன. எடுத்துக்காட்டாக நிலக்கரி, பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள் இன்றைய கால கட்டத்தில் உலகளவில் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. அதுமட்டுமல்ல தொழிற்சாலை மற்றும் போக்குவரத்து வாகனங்களில் இருந்து வரும் புகை வெளியேறுவது, காடுகளை அழித்தல் போன்றவற்றால் வளி மண்டலத்தில் கார்பன் – டை – ஆக்சைடு, மீத்தேன் போன்ற வாயுக்கள் (GASES) அதிகரிக்கின்றன. இந்த வாயுக்கள் பூமியை சுற்றி ஒரு போர்வை போல படிந்து வெப்பத்தை அதிகரிக்கின்றன. இதனால் பூமியின் வெப்பநிலை படிப்படியாக அதிகரிக்கின்றன. மேலும் பனிப்பாறை உருகுதல் மற்றும் காலநிலை மாற்றங்களும் ஒரு காரணமாக இருக்கின்றன.

**தடுக்க என்ன செய்ய வேண்டும்?**

3 R (REDUCES, REUSES, RECYCLING) ஆகியவற்றை பின்பற்ற வேண்டும்.

கார்பன் உமிழ்வை குறைக்க அதிகமாக மரங்களை நட வேண்டும்.

**2) பூமி குளர்ச்சியடைதல் (GEO THERMAL COOLING)**

இது பூமி வெப்ப மடைதலுக்கு நேர் மாறானது. சில சமயங்களில் சூரியனிடம் இருந்து வரும் வெப்பம் குறையலாம் அல்லது எரிமலை வெடிப்புகள் நடந்தால் அதிக அளவிலான தூசி மற்றும் புகை வளிமண்டலத்தில் பரவி சூரிய ஒளி பூமியை அடையாமல் தடுக்கலாம்.

இதனால் பூமியின் வெப்பம் குறைந்து குளிர்ச்சி அடையலாம். இந்த இரண்டையும் புரிந்து கொள்வது மிகவும் முக்கியம். நாம் மரங்களை நட்டால் அது இயற்கையை பாதுகாக்கும் சுற்றுப்புற சூழல் மாசு குறையும். இதனால் பூமி வெப்ப மடைதலை குறைக்கலாம்.

சுருக்கமாக சொன்னால் பூமியின் ஆரம்ப கால கட்டத்தில் குளர்ச்சி அதனுடைய தற்போதைய செயல்பாட்டிற்கு அடிப் படையாகும். ஆனால் நவீன கால குளிர்ச்சி என்பது பெரும் பாலும் காலநிலை மாற்றத்திற்கேற்ப மாறுகின்றன.

எனவே இன்றே இயற்கையை காப்போம், நாளைய பூமி நம்மை காப்பாற்றும். வருங்கால சந்ததியினர் வாழ வழி செய்வோம்.

நம்மால் முடிந்த அளவுக்கு மரங்களை நடுவோம், எரிப்பொருள் பயன்பாட்டை குறைப்போம். பொது போக்குவரத்தை பயன்படுத்துவோம்.

என்ன நீங்க ரெடியா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# கேவிகேயில் பட்டயப் படிப்பு மாணவர்களுக்கு தொழில்நுட்ப வகுப்பு நடந்தது




பெரம்பலூர், மார்ச் 28

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உரம், பூச்சி மருந்து விதை விற்பனை செய்ய உரிமம் பெற வேண்டியதற்கான பட்டயப் படிப்பு வகுப்பில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் புனிதவதி, டாக்டர் ராஜ பிரியா, ஆகியோர் வகுப்பு எடுத்தனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வாலிகண்டபுரத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் ஆய்வு மையம், ஹைதராபாத்தில் உள்ள மேனேஜ் நிறுவனம் மற்றும் குடுமியான் மலையில் உள்ள சமிதி ஆகியவைகள் மூலம் இந்த பட்டய படிப்பு ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

நேற்று முனைவர் பொன் விழி ரம்யா ஒருங்கிணைப்பாளர், அறிமுகம் செய்து வைத்தார். வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், கலந்து கொண்டு இன்றைய வகுப்பில் எளிதாக புரியும்படி இந்த பட்டயப் படிப்பின் நோக்கம், எவ்வாறு செயல்பட்டு விவசாயிகளுக்கு உதவி செய்திட வேண்டும், மற்றும் வேளாண்மை தொழில் நுணுக்கங் களுடன் மாணவர்களுக்கு வகுப்பு எளிமையாக, அனைத்தும் புரியும்படி, பயனுள்ள வகையில் எடுத்தார்.

டாக்டர் ராஜ பிரியா, ஒருங்கிணைந்த நீர் நிர்வாகம், டாக்டர் புனிதவதி, ஒருங்கிணைந்த களை நிர்வாகம், வகுப்பு எடுத்தார்கள். இந்த வகுப்பில் 40 மாணவர்கள் பட்டயப் படிப்பிற்காக கலந்து கொண்டனர்.

கே வி கே தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் வசந்த் குமார் தெரிவித்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நவீன வேளாண்மையில் மக்கான விதை (தாமரை)

தண்ணீரிலேயே விதைக்கப்பட்டு, தண்ணீரில் வளர்ந்து, பூத்து, காய்த்து, பழுத்து விதைகளை தண்ணீருக்குள்ளேயே வெடித்து சிதறவிடும் குணம் கொண்டது இந்த பயிர். இவ்வாறு தண்ணீருக்கடியில் போகும் விதைகளை தேடி எடுத்து அதை சுத்தப்படுத்தி சந்தைப்படுத்துவது தான் வேலை.

மக்கானா (Makhana) என்ற இந்த பயிர் Nymphaeaceaae என்ற நீர்த்தாவர குடும்பத்தைச் சேர்ந்த இதன் அறிவியல் பெயர் Euryale ferox என்பதாகும். வெப்ப மண்ட நாடுகளில் (Tropical and sub Tropicalcountries) இது விளையக் கூடியது. இதனால் தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் இது பயிராகிறது.

பெரும்பாலான நம் தமிழக விவசாயிகளுக்கு இந்த பயிர் குறித்து போதுமான தகவல் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதால் இந்த பயிர் குறித்து பல்வேறு தரவுகளிலிருந்து விவரங்களை திரட்டப்பட்டு பின்வருமாறு தொகுத்து அளிக்கப்படுகிறது.

**மக்கானா பயிர் எப்படி இருக்கும்?**

நமது ஊரில் குளங்களிலும், ஏரிகளிலும் தாமரைச் செடிகள் வளர்ந்து நீர் மட்டத்திற்கு மேலே அகலமான இலைகளையும் பூக்களையும் பரப்பி நிற்குமல்லவா? அந்தக் காட்சியை ஒரு முறை நினைத்துக் கொள்ளுங்கள். மக்கானவும் அப்படித்தான் இருக்கும். மக்கானா பயிர் விளைய குளம், ஏரி ஆகியவற்றில் குறைந்தபட்சம் 1 அடி முதல் 1.5 அடி வரை தண்ணீர் ஆண்டு முழுவதும் தேங்கியிருக்க வேண்டும். 4 அடி முதல் 6 அடி வரை நிற்கும் நீர் நல்ல உற்பத்தியை தரும். காற்றின் வெப்பநிலை 20 டிகிரி செல்சியல் முதல் 35 டிகிரி செல்சியஸ் வரை இருக்க வேண்டும். Humidity 50%-90% வரை இருக்க வேண்டும். மக்கானா விளையும் பிரதேசம், ஆண்டுக்கு குறைந்த பட்சம் 100 மிமி வரை மழை பொழிவு பிரதேசமாக இருக்க வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

**மக்கானாவின் பருவங்கள்**

மக்கானா விதைகள் டிசம்பர் மாதத்தில் தண்ணீரில் தூவப்படுகின்றன. அல்லது ஏற்கனவே தண்ணீருக்கடியில் விழுந்து கிடக்கும் விதைகள் முளைக்கின்றன. தண்ணீரில் தூவப்பட்ட விதைகள் வளர்ந்து அதன் துளிர் இலைகள் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் தண்ணீர் மட்டத்திற்கு வெளியே தலைகாட்டத் தொடங்குகின்றன.

இதை அடுத்த இரண்டு மாதங்களில் அதாவது மார்ச், ஏப்ரல் மாதங்களில் குளம் முழுவதும் இலைகள் பரவி விடும். இவற்றின் இலைகள் பெரிய அகன்ற அளவுகளில் முட்களுடன் காணப்படும். ஏப்ரல், மே மாதங்கள் பூக்கும் பருவமாகும். இதன் பூக்கள் ஒரு சில நாட்கள் மட்டுமே தண்ணீர் மேற்பரப்பில் இருக்கும். அதன்பின் பூக்களும் நீரினுள் மூழ்கி விடும். இதைத் தொடர்ந்து பூக்கள் நீரினுள்ளேயே காய்த்து பழுக்கத் தொடங்கும்.

அனேகமாக மே மாதத்தில் இவை பழுக்கத் தொடங்குகின்றன. பழங்கள் நீரினுள்ளேயே வெடித்து சிதறுகின்றன. இவ்வாறு வெடித்து சிதறும் விதைகள் நீர்மட்டத்திற்கு மேலே மிதந்து வந்து ஒரு சில நாட்கள் நீர் மேற்பரப்பில் மிதக்கின்றன.

அதன்பின் அந்த விதைகள் தண்ணீருக்கடியில் சென்று மண்ணில் தேங்கி விடுகின்றன. பழங்கள் பழுத்ததும் நீர் மட்டத்தில் உள்ள இலைகளும் பல பிரிவுகளாக கிழிந்து நீரினுள் சென்று அழுகி மண்ணுக்கு உரமாகி போகின்றன. நீரினுள் பழுத்த விதைகள் வெடித்ததும் ஒரு சிலநாட்கள் மேற்பரப்பில் வந்து மிதக்குமல்லவா அவ்வாறு விதைகள் மிதக்கும் நாட்களை உன்னிப்பாக கவனித்து வரவேண்டும். அதுதான் அறுவடைக் கான நேரம். மிதந்த விதைகள் ஓரிரு நாட்களில் நீருக்கடியில் புதைந்து விடும். இவ்வாறு புதைந்த விதைகளைத்தான் விவசாயிகள் நீருக்கடியில் மூழ்கி, கடலில் முத்து எடுப்பதைப் போல கூடைகளில் சேகரித்து வரவேண்டும்.

**மருத்துவ குணங்கள்**

கிட்னி, இருதயம், வயிறு மற்றும் செரிமானம் சம்பந்தமான நோய்கள், சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தத்தை சமநிலைப் படுத்துதல், மூளையின் செயல்பாடுகளை தூண்டுதல் போன்ற வற்றுக்கு இது மிகச்சிறந்த உணவு என்றும் ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

இந்த நோய்களுக்கு இந்த விதைகளிலிருந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. சீனா மருத்துவத்தில் இந்த விதைகள் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருத்துவ முறைகளில் இவ்விதைகள் ஒரு வகை மூலப் பொருளாக சேர்க்கப்படுகின்றன.

**ஏற்றுமதி நாடுகள்**

இந்தியாவிலிருந்து அமெரிக்கா, இங்கிலாந்து, வளைகுடா நாடுகள், பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற நாடுகளில் மக்கானா விதைகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளதால் அந் நாடுகளுக்கு இவ்விதைகள் இந்தியாவிவிருந்து ஏற்றுமதியா கின்றன.

**மதிப்புக் கூட்டும் பொருட்கள்**

மக்கானா விதைகள் பல்வேறு வடிவில் மதிப்புக் கூட்டப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. மக்கானா பாயசம் மிக்ஸ், அல்வா மிக்ஸ், மக்கானா பனீர், தோசை மாவு உட்பட பல்வேறு உணவுப் பொருட்களாக மக்கானா விதைகள் மாற்றப்பட்டு விற்பனையாகின்றன.

நவராத்திரி போன்ற பண்டிகை காலங்களில் மக்கானா விதைகள் அடங்கிய உணவுகள் விரும்பி உண்ணப்படுகின்றன. வெளிநாடுகளிலும் பண்டிகை கால விசேச உணவுகளின் பட்டியலில் மக்கானா உணவுகளும் கண்டிப்பாக உண்டு.

தகவல் : T.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைப் பொறியாளர், உடுமலைப்பேட்டை.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# மாடுகளில் மடிக்காம்பு நுனி சுருக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள்

கறவை மாடுகளில் பல்வேறு காரணங்களால் மடிக்காம்பின் உட்பகுதி மற்றும் நுனியில் ஏற்படும் பாதிப்புகளால் மடிக் காம்பின் நுனியில் உள்ள துவாரமானது சுருங்கி விடுவதால் பால் கறக்கும் பொழுது மடியிலிருந்து எளிதாக சீராகபால் வராமல் மாடுகளுக்கு கறவையின் பொழுது வலியை உண்டாக்கக்கூடிய ஒரு முக்கியமான பாதிப்பை ஏற்படுத்து கின்றன. பசுக்களில் மடிக்காம்பு நுனி சுருக்கம் என்பது பால் உற்பத்தியை நேரடியாக பாதிக்கும் ஒரு முக்கிய பிரச்சினை என்பதால் மடிக்காம்பு நுனி சுருக்கம் ஏற்படுவதற்கான காரணங் களைத் தடுப்பது, சரியான பால் கறக்கும் முறைகளை பின் பற்றுவது மற்றும் ஆரம்பத்திலேயே மருத்துவ உதவி பெறுவது இந்தப் பிரச்சினையை குறைக்கவும், பசுவின் ஆரோக்கி யத்தையும் பால் உற்பத்தியையும் மேம்படுத்தவும் உதவும்.

### மடிக்காம்பு நுனி சுருக்கம் ஏற்பட காரணங்கள்

மடிக்காம்பு மற்றும் மடிக்காம்பு நுனியில் பல்வேறு காரணங் களால் ஏற்படும் காயங்கள், தவறான முறையில் பால் கறத்தல், கரடு முரடான கை களால் பால் கறத்தல், மடிக்காம்புகளை அதிகப்படியாக அழுத்துதல், மடி நோயால் ஏற்படும் மடி நோய் அழற்சி மற்றும் திசு மாற்றம், மடிக்காம்பின் உட்பகுதியில் ஏற்படும் கண்ணுக்குத் தெரியாத காயங்கள், வீக்கம், மடிக் காம்பின் உள்ளே கட்டிகள் மற்றும் சதை வளர்ச்சி, ஆகிய வற்றால் மடிக்காம்பின் உட்பகுதி அமைப்பு சேதமடைந்து, வீக்கம் ஏற்பட்டு பிறகு காயம் ஆறும் பொழுது காயத் தழும்புக் கான திசு உருவாதல் போன்ற காரணங்களால் மடிக்காம்பின் நுனி சுருங்கி விடுகின்றன.

அறிகுறிகள்

பால் கறக்கும் பொழுது மடிக்காம்பை அழுத்தும் பொழுது வலி ஏற்படுதல், பால் கறவையின் பொழுது மாடுகள் அசௌகர்ய மாக இருத்தல், மெதுவாக மற்றும் மெல்லிய ஓட்டமாக பால் வெளியேறுதல், அதன் காரணமாக பாலை மடியிலிருந்து முழுமையாக கறப்பதற்கு அதிக நேரமாதல், முழுமையாக பாலை கறக்க முடியாமல் போதல் மற்றும் பாலை முழுமையாக

கறக்க முடியாதகாரணத்தால் அடிக்கடி மடி நோய் ஏற்படுதல் போன்ற அறிகுறிகள் தென்படும்.

**சிகிச்சை முறைகள்**

மடிக் காம்பிலிருந்து பால் வருவது சிரமமாக இருக்கும் நிலையிருந்தால் உடனடியாக கால்நடை மருத்துவரை அணுக வேண்டும். கால்நடை மருத்துவர் மடியையும் மடிக்காம்பையும் பரிசோதனை செய்து காரணத்தை கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளிப்பார். மடிக்காம்பின் நுனியானது அதிக அளவு சுருங்கி பால் வருவது மிகவும் கடினமாக இருக்கும் பொழுது கால்நடை மருத்துவர் கொண்டு உணர்விழக்கும் மருந்தினை காம்பில் செலுத்தி சிறிய அறுவை சிகிச்சை செய்து காம்பின் நுனியை அகலப்படுத்திய பிறகு மீண்டும் மடிக்காம்பின் நுனி சுருங்காமல் இருப்பதற்காக காம்பில் வைக்கக்கூடிய ஒரு சிறிய பிளாஸ்டிக் கால் ஆன குமிழ் கொண்டு பொருத்தி சிகிச்சை அளிப்பது மடிக்காம்பு நுனி சுருக்கத்திற்கான உடனடி தீர்வாகும்.

மடிக்காம்பின் உட்பகுதியில் ஏதேனும் சிறிய கட்டிகள் இருந்தாலோ அல்லது காயங்களால் உண்டான தழும்புகளாலோ சுருக்கம் ஏற்பட்டு பால் வருவதில் சிரமம் இருந்தால் கால்நடை மருத்துவர் பிரத்தியேகமான கருவிகள் கொண்டு மடிக்காம்பின் உட்பகுதியில் சுருக்கத்தை நீக்கி பின் பிளாஸ்டிக்கால் ஆன குமிழ் பொருத்தி சிகிச்சை அளிப்பதன் மூலம் சரி செய்ய முடியும். மடிநோயால் இந்த பிரச்சினை ஏற்பட்டிருந்தால் மடிநோயை குணப்படுத்துவதற்கான ஆன்டிபயாடிக் மருந்துகள், அழற்சியை குறைக்கும் மருந்துகள் கொண்டு மடிநோயை குணப்படுத்த வேண்டும்.

**தடுப்பு முறைகள்**

சரியான மற்றும் மென்மையான பால் கறக்கும் முறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் மடிக்காம்பு நுனியில் ஏற்படும் சேதத்தை தவிர்க்க முடியும்.

சுத்தமான பால் கறவை முறைகளை தினமும் கையாள வேண்டும். மடியிலும் மடிக்காம்பிலும் காயங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பால் கறவைக்குமுன்னும் பின்னும் மடியின் அனைத்து பாகங்களையும் 1 சதவிகித பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு கழுவி சுத்தம் செய்ய வேண்டும். கறவை மாடுகளை ஈரமில்லாத மற்றும் சுத்தமான சூழலில் வைத்து பராமரிக்க வேண்டும்.

பால் கறக்கும் கருவிகளை பயன்படுத்தினால் அவற்றை முறையாக மடிக்காம்பில் பொருத்த வேண்டும். மேலும் அவற்றை சுத்தமாக பராமரிக்க வேண்டும்.

மடிநோய் ஏற்பட்டால் கால்நடை மருத்துவர் கொண்டு உடனடியாக தகுந்த சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

தகவல் : **முனைவர் இரா. உமாராணி, பேராசிரியர், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங் குன்றம், மதுரை – 625 005.**

# இயற்கை உரத்துக்காக வயல்களில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட வாத்துகள்

தஞ்சாவூர், மார்ச் 28

தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை பகுதியில் இயற்கை உரத்துக்காக வயல்களில் வாத்துக்கள் மேய்ச்சலுக்கு விடப்படு கின்றன. காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறையில் குறுவை, சம்பா, தாளடி என மூன்றுபோகம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் கோடை நெல் சாகுபடியும் நடைபெறுகிறது.

காவிரி டெல்டா சாகுபடிக்காக மேட்டூர் அணை ஆண்டு தோறும் ஜூன் மாதம் 12ம் தேதி திறக்கப்படுவது வழக்கம். தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி நெல் அறுவடை பணி முடியும் தருவாயில் உள்ளது. இதை தொடர்ந்து கோடை சாகுபடிக்காக விவசாயிகள் நிலங்களை தயார்படுத்தி வருகின்றனர். விவசாயிகள் ரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்தி சாகுபடி செய்து வருகின்றனர்.

இதற்காக வயல்களில் ஆட்டு கிடை அமைத்தும், வயல்களை வாத்துகளை மேயச்சலுக்கு விட்டும் அதன் கழிவுகள் மூலம் இயற்கை உரங்களை பெறுகின்றனர். தற்போது நாஞ்சிக் கோட்டை பகுதியில் இயற்கை உரத்திற்காக வயல்களில் வாத்து களை மேய்ச்சலுக்கு விட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த வாத்துகளின் கழிவுகள் இயற்கை உரமாக பயன்படுகிறது. பயிர்களை தாக்கும் பூச்சிகளை வாத்துகள் அழிக்கின்றன. இதனால் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கும் செலவும் குறைகிறது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நவீன வேளாண்மையில் உழவு பணிக்காக டிராக்டர் இயக்க இலவச பயிற்சி

விவசாயக் கூலித் தொழிலாளார்கள் தட்டுப்பாடு, வருவாய்க்கு மிஞ்சிய செலவினம் போன்ற காரணங்களால் நாற்று நடுதல் முதலான அனைத்து பணிகளுக்கும் நவீன கருவிகளின் பயன் பாடுகள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் விவசாயத் தைப் பொறுத்தவரை நவீன கருவிகளின் தேவை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. முன்பெல்லாம் அறுவடை காலங்களில் விவசாய கூலித் தொழிலாளர்கள் மூலம் அறுவடை காலதாமதம் ஆகும். ஆனால் தற்போது அறுவடை செய்யும் பணிக்கு போதிய ஆட்கள் கிடைப்பது சிரமமாக உள்ளது. இதனால் அனைத்து பகுதிகளிலும் அறுவடை இயந்திரங்கள் மூலமே அறுவடை நடந்து வருகிறது. இதன் மூலம் எளிதில் அறுவடை முடிந்து விடுகிறது. இதனால் வேளாண் இயந்திரங்களின் பயன்பாடு தற்போதைய காலத்தில் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

அந்த வகையில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் டிராக்டர் இயந்திரங்களை வேளாண் இணைப்புக் கருவிகளுடன் இயக்க 27 நாட்கள் உதவி டிராக்டர் ஒட்டுநர் பயிற்சி அளிக்கப் படுகிறது. அத்துடன் பயிற்சியாளர்களுக்கு டிராக்டர் இன்ஜின் செயல்பாடு பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் குறித்து தெளிவாக அறிந்து கொள்ள முடியும். இந்த பயிற்சியின் முடிவில் தகுதி யான பயிற்சியாளர்களுக்கு அரசு சான்றிதழும் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சிக்கு கட்டணடம் எதுவும் கிடையாது. பயிற்சி காலம் 27 வேலை நாட்கள் ஆகும். இதில் டிராக்டர் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பயிற்சி அளிக்கப்படுவதுடன் டிராக்டர் ஒட்டு நருக்கான உரிமமும் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் பெற்றுத்தரப்படுகிறது. காலை 09.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை பயிற்சி அளிக்கப்படும். இதற்கான கல்வித்தகுதி எதுவும் கிடையாது. வயது வரம் 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். இந்த பயிற்சி பெற விரும்பு பவர்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் வங்கி புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை, சாதி சான்றிதழ் ஆகிய வற்றுடன் அந்தந்த மாவட்டங்களில் வேளாண்மை பொறியியல் துறை, செயற்பொறியாளர் / உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களை அணுகலாம்.

வேளாண்மை துறையில் இயந்திரங்களின் பயன்பாடு அதிகரித்து விட்ட நிலையில் ஒரு பைசா செலவு ஏதுமின்றி வேளாண்மை பொறியியல் துறை டிராக்டர் ஒட்டுவதற்கான பயிற்சியும் அளித்து அதற்கான ஒட்டுநர் உரிமமும் பெற்றுத் தருகிறது. இதன் மூலம் சொந்த டிராக்டர் வாங்க வேண்டும் என்ற ஆர்வமுடைய விவசாயிகள் இந்த பயிற்சி பெற்று உரிமம் பெறுவதன் மூலம் தங்கள் நிலத்திற்கு டிராக்டர் பயன்படுத்து வதுடன் அதன் மூலம் வருமானமும் பெற முடியும்.

தகவல் : ***T.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலைப்பேட்டை.***